ராஜஸ்தான் பாஜக எம்எல்ஏ பதவி பறிப்பு: துப்பாக்கி காட்டி மிரட்டிய வழக்கில் 3 ஆண்டுகள் சிறை

ஜெய்பூர், மே 23: கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு வருவாய் கோட்டாட்சியரை துப்பாக்கி காட்டி மிரட்டிய வழக்கில் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற ராஜஸ்தான் பாஜக எம்எல்ஏ கன்வர் லால் மீனாவின் பதவி பறிக்கப்பட்டதாக அந்த மாநில பேரவைச் செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த 2005-ஆம் ஆண்டு கிராம பஞ்சாயத்து தலைவர் தேர்தல் வாக்கு எண்ணிக்கையை மீண்டும் நடத்தக் கோரி வருவாய் கோட்டாட்சியரை துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாக கன்வர் லால் மீனா மீது வழக்குத் தொடுக்கப்பட்டது.

அரசு அதிகாரிகளைப் பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும், அரசு சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியதாகவும் 20 ஆண்டுகளுக்குப் பிறகு கன்வர் மீனாவுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி விசாரணை நீதிமன்றம் கடந்த 2020-இல் உத்தரவிட்டது.

இந்நிலையில், விசாரணை நீதிமன்ற உத்தரவை ரத்து செய்யக் கோரி கன்வர் லால் மீனா தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், 2 வாரங்களில் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இதையடுத்து கடந்த 21-ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜரான மீனா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மீனாவை கடந்த மே 1-ஆம் தேதியிலிருந்து எம்எல்ஏ பதவியிலிருந்து நீக்குவதாக ராஜஸ்தான் பேரவைச் செயலகம் வெள்ளிக்கிழமை அறிவிக்கை வெளியிட்டது.

இது தொடர்பாக சட்ட வல்லுநர்களிடம் பேரவைத் தலைவர் கேட்ட ஆலோசனையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்வர் லால் மீனாவின் ஆன்டா தொகுதி காலியானதாக தேர்தல் ஆணையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்றும், அக்டோபர் மாதத்துக்குள் அந்தத் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடத்தப்படலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவரும், மாநில காங்கிரஸ் தலைவருமான திகாராம் கூறுகையில், 'விசாரணை நீதிமன்ற உத்தரவின்படி மீனா மீது நடவடிக்கை எடுக்கக் கோரி ஆளுநர் மற்றும் பேரவைத் தலைவரிடம் பல முறை கடிதம் வழங்கியும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடுத்த பிறகுதான் அவரது எம்எல்ஏ பதவி பறிக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்கும், அரசமைப்புச் சட்டத்துக்கும் கிடைத்த வெற்றி' என்றார்.

பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதத்தை வெளிப்படுத்திய 'ஆபரேஷன் சிந்தூர்'

அமித் ஷா

புது தில்லி, மே 23: 'இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதத்துக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவளித்து வருவது 'ஆபரேஷன் சிந்தூர்' மூலம் வெளிப்பட்டுள்ளது' என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) சார்பில் நடைபெற்ற ருஸ்தம்ஜி நினைவு கருத்தரங்கில் பங்கேற்று அமித் ஷா பேசியதாவது: 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின்கீழ் பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை நாம் தகர்த்தோம். பாகிஸ்தான் ராணுவ நிலைகள், விமான தளங்கள் மற்றும் பொதுமக்களை நாம் குறிவைக்கவில்லை. ஆனால் பயங்கரவாதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி தந்து இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதத்துக்கு தாங்கள் ஆதரவு தருவதை வெளிப்படையாக பாகிஸ்தான் ஒப்புக்கொண்டுள்ளது.

புது தில்லியில் பிஎஸ்எஃப் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பிஎஸ்எஃப் தலைமை இயக்குநர் தல்ஜித் சிங் சௌதரி.

நம் நாட்டுமக்களை குறிவைத்து பாகிஸ்தான் நடத்திய தாக்குதல்கள் அனைத்தும் முறியடிக்கப்பட்டன. மத்தியில் பாஜக ஆட்சி அமைந்த பின் உரி, புல்வாமா என நமது ராணுவ வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கடும் பதிலடி தரப்பட்டது. அண்மையில், பஹல்காமில் மதத்தைக் கேட்டு அப்பாவி சுற்றுலாப் பயணிகளை பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். அதற்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் மிகக் கடுமையான பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது. இதை உலக நாடுகள் பாராட்டி வருகின்றன.

இந்திய-வங்கதேச எல்லை பாதுகாப்பில் பிஎஸ்எஃப்பின் பங்களிப்பு இன்றியமையாதது. வங்கதேசம் உருவானதில் பிஎஸ்எஃபின் பங்களிப்பு ஈடு இணையற்றது. அதை அந்நாடு ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

1965 முதல் 2025 வரை நாட்டுக்காக வீர மரணமடைந்த 2,000-க்கும் மேற்பட்ட பிஎஸ்எஃப் வீரர்களுக்கு நாட்டு மக்கள் சார்பாக மரியாதை செலுத்துகிறேன் என்றார்.

பிஎஸ்எஃப் அமைப்பின் நிறுவனரானகே.எஃப்.ருஸ்தம்ஜி அதன் முதல் தலைமை இயக்குநராவார். அவரது பெயரில் நினைவு கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது. கிழக்கே பாகிஸ்தான் மேற்கே வங்கதேசம் என இந்திய எல்லைகளை பாதுகாக்கும் பணியில் 2.75 லட்சம் பிஎஸ்எஃப் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெங்களூரில் 9 மாத குழந்தைக்கு கரோனா தொற்று

பாதிப்பு 33-ஆக உயர்வு



பெங்களூரு, மே 23: கர்நாடகத்தில் கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 33-ஆக உயர்ந்துள்ள நிலையில் 9 மாத குழந்தைக்கும் கரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே கரோனா பரவல் குறித்து பொதுமக்கள் யாரும் அச்சமடைய வேண்டாம்; நிலைமை கட்டுக்குள் உள்ளது என கர்நாடக சுகாதாரத் துறை தினேஷ் குண்டுராவ் தெரிவித்துள்ளார்.

கரோனா பெருந்தொற்றின் புதிய வகை தீநுண்மியான ஜே.என்.1 சிங்கப்பூர் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் பரவிவருவதால் உலக நாடுகளிடையே கரோனா அச்சம் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இந்தியாவில் கரோனா தொற்றுக்கு இதுவரை 257 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இதனிடையே, கர்நாடகத்தில் பெங்களூரு ஊரக மாவட்டத்தின் ஹொசகோட்டேயைச் சேர்ந்த 9 மாத குழந்தைக்கு கரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டது.

இதுகுறித்து சுகாதாரத் துறை அமைச்சர் தினேஷ் குண்டு ராவ் கூறியதாவது: கர்நாடகத்தில் கரோனா பாதிப்பு கண்டறியப்பட்டிருந்தாலும், அது குறித்து யாரும் கவலைப்பட வேண்டாம். நிலைமை கட்டுக்குள் உள்ளது. கரோனா பாதிப்பை அரசு கவனித்துவருகிறது என்றார்.

சுகாதாரத் துறை முதன்மைச் செயலர் ஹர்ஷ் குப்தா கூறியதாவது: கர்நாடகத்தில் ஜனவரியில் 3 பேரும், பிப்ரவரியில் ஒருவரும், மார்ச், ஏப்ரல் மாதங்களில் 3 பேரும் கரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மே மாதத்தில் (23-ஆம் தேதி வரை) பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை 33-ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 16 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பெங்களூரில் 9 மாத குழந்தை கரோனாவால் பாதிக்கப்பட்டிருப்பது வியாழக்கிழமை (மே 22) தேதி உறுதி செய்யப்பட்டது. தற்போது குழந்தையின் உடல்நிலை சீராக உள்ளது. மேலும், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குழந்தை தற்போது பெங்களூரில் உள்ள வாணிவிலாஸ் அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது என்றார்.

அரசு மருத்துவர் ஒருவர் கூறுகையில், 'கரோனா பாதித்தவர்களுக்கு லேசான காய்ச்சல், இருமல் அறிகுறிகள் உள்ளது. என்றாலும், மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய நிலை இல்லை. பெருந்தொற்று காலத்தைப் போல தற்போது கரோனா தொற்று வேகமாகப் பரவவில்லை. முன்னெச்சரிக்கையாக முகக்கவசம், சமூக இடைவெளி, கைகளைச் சுத்தம் செய்வது போன்றவற்றைக் கடைப்பிடிப்பது பாதுகாப்பானது' என்றார்.

அரசமைப்பு உரிமைகளை உச்சநீதிமன்றம் பாதுகாக்கிறது

நீதிபதி அபய் எஸ்.ஓகா

புது தில்லி, மே 23: அரசமைப்பு உரிமைகள், சுதந்திரத்தை உச்சநீதிமன்றம் மட்டும்தான் பாதுகாத்து வருகிறது என்று பணி ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அபய் எஸ். ஓகா தெரிவித்தார்.

நீதிபதி அபய் எஸ்.ஓகாவின் தாயார் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு காலமானார். இந்நிலையில், தனது இறுதி பணிநாளான வெள்ளிக்கிழமை உச்சநீதிமன்றத்துக்கு வந்த அபய் எஸ். ஓகா, 11 வழக்குகளில் தீர்ப்புகளை வழங்கினார்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், நீதிபதி அகஸ்டின் ஜார்ஜ் மாசி ஆகியோருடன் இணைந்த அமர்வில் நீதிபதி அபய் எஸ் ஓகா வெள்ளிக்கிழமை பங்கேற்றார்.

பின்னர் பேசிய நீதிபதி அபய் எஸ்.ஓகா, 'அரசமைப்பு உரிமைகள், சுதந்திரத்தைப் பாதுகாக்கும்

ஒரே நீதிமன்றம் உச்சநீதிமன்றமாகும். இதுதான் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் கனவாகவும் இருந்தது. அதை எனது பணிநாள்களில் உறுதி செய்துள்ளேன். பிரபலமாவதற்காக நாம் நீதிபதியாகவில்லை என ஒரு சிறந்த நீதிபதி எனக்கு ஆலோசனை வழங்கினார். அந்த ஆலோசனையை நான் பின்பற்றினேன்.

சில நேரங்களில் வழக்குகளில் ஆஜராகும்வழக்குரைஞர்களிடம் நான் கடிந்து கொண்டுள்ளேன். அரசமைப்புச் சட்டத்தின் விதிமுறைகளை உறுதி செய்யவே நான் அப்படி நடந்து கொண்டேன்' என்றார்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் பேசுகையில், 'என்னைப்போல் ஓய்வுக்குப் பிறகு எந்தப் பதவியையும் வகிக்க நீதிபதி அபய்.எஸ் ஓகாவும் விரும்பவில்லை' என்றார். வரும் நவம்பர் 23-ஆம் தேதி தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் பணி ஓய்வு பெறுகிறார்.

மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி பேசுகையில், 'வழக்கில் தொடர்புடைய அனைவரின் வாதங்களையும் நீதிபதி ஓகா கேட்காமல் இருந்ததில்லை' என்றார்.

'தலைமை நீதிபதி அமர்வை மையமாக்கி உச்சநீதிமன்றம் இயங்குகிறது'

'தலைமை நீதிபதி அமர்வை மையமாக்கி உச்சநீதிமன்றம் இயங்குகிறது; இந்தநிலை மாற வேண்டும்' என்று நீதிபதி அபய் எஸ். ஓகா தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், 'உச்சநீதிமன்றத்தைவிட உயர்நீதிமன்றங்கள் கூடுதல் ஜனநாயக முறையில் இயங்குகின்றன. இதற்கு அங்குள்ள 5 நீதிபதிகள் அடங்கிய நிர்வாகக் குழுதான் காரணம்.

ஆனால், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 35 நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்றம், தலைமை நீதிபதி அமர்வை மையமாகக் கொண்டு இயங்குகிறது. இந்த நிலை மாற வேண்டும்.

வழக்குகள் விசாரணைக்கு பட்டியலிடப்படுவதில் மனிதர்களின் தலையீடு இல்லாமல் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்' என்றார்.

சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'பணியில் நீதிபதி ஓகா செலுத்திய அர்ப்பணிப்பைப் பார்க்கும்போது, கடமை என்றால் என்ன என்பதை மற்றவர்களுக்கு உணர்த்தியது' என்றார்.

உச்சநீதிமன்றத்தின்மூன்றாவது மூத்த நீதிபதியான ஓகா, 2003-இல் மும்பை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி, 2019-இல் கர்நாடக உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி உள்ளிட்ட பதவிகளை வகித்து, 2021, ஆகஸ்ட் 31-ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

அமெரிக்காவில் ஐஃபோன்கள் தயாரிக்காவிட்டால் 25% இறக்குமதி வரி

ஆப்பிள் நிறுவனத்துக்கு டிரம்ப் எச்சரிக்கை

வாஷிங்டன், மே 23: ஐஃபோன்களை அமெரிக்காவில் தயாரிக்காவிட்டால் ஆப்பிள் நிறுவனத்தின் மற்ற பொருள்களுக்கு 25 சதவீத இறக்குமதி வரி விதிப்பதாக அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் வெள்ளிக்கிழமை எச்சரித்தார்.

மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது 50 சதவீதம் வரி விதிக்கவுள்ளதாகவும் இது ஜூன் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் எனவும் டிரம்ப் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்தியாவில் ஆப்பிள் நிறுவனம் ஐஃபோன்களை தயாரிப்பதில் தனக்கு விருப்பமில்லை என டிரம்ப் கூறிய நிலையில் தற்போது நேரடியாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து ட்ரூத் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'அமெரிக்காவில் விற்பனை செய்யப்படும் ஐஃபோன்கள் அமெரிக்காவில் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும். இந்தியா உள்ளிட்ட வேறு எந்த நாட்டிலும் இதை மேற்கொள்ளக்கூடாது என ஆப்பிள் நிறுவனர் டிம் குக்கிடம் ஏற்கெனவே கூறிவிட்டேன். அதை அவர் ஏற்காவிட்டால் ஆப்பிள் நிறுவனத்தின் மற்ற பொருள்களுக்கு 25 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்படும்.

அமெரிக்க பொருள்கள் மீது விதிக்கப்படும் வரியை 30 சதவீதமாக சீனா குறைத்தது. இதனால் சீனாவுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தப் பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதனால் ஐரோப்பிய ஒன்றியப் பொருள்கள் மீது ஜூன் 1-ஆம் தேதி முதல் 50 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது' எனக் குறிப்பிட்டார்.

டிரம்ப்பின் அறிவிப்பைத் தொடர்ந்து ஐஃபோன்களின் விலை அதிகரிப்பதோடு அதன் விற்பனை மற்றும் லாபமும் பெருமளவில் பாதிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிரம்ப் விடுத்த இறக்குமதி வரி விதிப்பு எச்சரிக்கைக்கு அமேசான், வால்மார்ட் ஆகிய நிறுவனங்கள் பதிலளிக்காத நிலையில், தற்போது அந்த வரிசையில் ஆப்பிள் நிறுவனமும் இணைந்துள்ளது.

முன்னதாக, சீனாமீதானவரியை அதிகரிப்பதாக டிரம்ப் தெரிவித்ததையடுத்து, ஐஃபோன் உற்பத்தியை சீனாவில் இருந்து இந்தியாவுக்கு மாற்ற டிம் குக் முடிவுசெய்தார். இதற்கு டிரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

மணிப்பூர் வன்முறை வழக்குகளை விசாரிக்க சிறப்பு என்ஐஏ நீதிமன்றம்

மத்திய அரசு அறிவிப்பு

புது தில்லி, மே 23: மணிப்பூரில் வன்முறைச் சம்பவங்கள் குறித்த வழக்குகளை விசாரிக்க சிறப்பு என்ஐஏ நீதிமன்றத்தை மத்திய அரசு அமைத்துள்ளது.

மணிப்பூரில் பெரும்பான்மையினராக உள்ள மைதேயி சமூகத்தினருக்கும், சிறுபான்மையினராக உள்ள குகி-ஜோ சமூகத்தினருக்கும் இடையே கடந்த 2023-ஆம் ஆண்டு மே மாதம் மோதல் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து இரு சமூகத்தினருக்கு இடையே நீடித்து வந்த வன்முறையில் 250-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். தற்போது வரை அங்கு முழுமையாக இயல்பு நிலை திரும்பவில்லை.

இந்நிலையில், அங்கு நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க சிறப்பு என்ஐஏ நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள சுராசந்த்பூர் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் சிறப்பு என்ஐஏ நீதிமன்றமாகச் செயல்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மணிப்பூர் முழுவதும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை இந்தநீதிமன்றம்விசாரிக்க உள்ளது.

ஐபிஎல் பெயரில் சூதாட்டம்

மத்திய, மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்

புது தில்லி, மே 23: ஐபிஎல் கிரிக்கெட்டை மையமாக வைத்து சூதாட்டமும், பந்தயம் கட்டி விளையாடுவதும் அதிகரித்துவிட்டது என்று கருத்து தெரிவித்த உச்சநீதிமன்றம், இது தொடர்பாக மத்திய அரசு, மாநில அரசுகள் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டது.

ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி சேனல்கள், செயலிகளில் இணையவழி விளையாட்டு என்ற பெயரிலான சூதாட்டம், பந்தயம் கட்டும் செயலிகளின் விளம்பரங்களே அதிகம் இடம் பெறுகின்றன.

இது தவிர ஐபிஎல் கிரிக்கெட்டை மையமாக வைத்து பந்தயம் கட்டுவது போன்றவையும் அதிகம் நிகழ்கின்றன. இதில் கோடிக்கணக்கில் பணம் புழங்குவதாகவும், பெருமளவிலான மக்கள் இந்தப் பந்தய மோசடியில் பணத்தை இழக்கின்றனர். இது போன்று கிரிக்கெட் போட்டியை மையப்படுத்திய சூதாட்டச் செயலிகளுக்கு தடை விதிக்கக்கோரி கே.ஏ.பால் என்பவர் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விவரம்:

இணைய வழியில் விளையாட்டு என்ற பெயரில் நடைபெறும் சூதாட்டம், பந்தயம் கட்டுதல் ஆகியவற்றின் மூலம் இளைஞர்கள் மட்டுமின்றி சிறார்களும் பாதிக்கப்படுகின்றனர். அதில் பணத்தை இழக்கும் பலர் கடனில் மூழ்கி தற்கொலை செய்துகொள்வதும் அதிகரித்து வருகிறது.

இந்த சூதாட்ட செயலிகளின் விளம்பரங்களில் பிரபல கிரிக்கெட் வீரர்கள், நடிகர்கள் உள்ளிட்டோர் தோன்றுவதால் சிறுவர்கள் இந்த வலையில் எளிதில் சிக்கிவிடுகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளில் இந்த சூதாட்டச் செயலிகளால் ஏராளமான பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இழந்துள்ளனர்.

தெலங்கானாவில் மட்டும் 1,023 பேர் இந்த சூதாட்ட செயலிகளில் பணத்தை இழந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

நாட்டின் எதிர்காலமான மாணவர்கள், இளைஞர்களின் வாழ்வைச் சீரழிக்கும் இது போன்ற சூதாட்டச் செயலிகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் சூர்ய காந்த், என்.கோட்டீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறியதாவது:

ஐபிஎல் கிரிக்கெட்டின் பெயரில் பலரும் சூதாட்டம் நடத்துவது, பந்தயம் கட்டுவது அதிகரித்து வருகிறது. இது மிகவும் தீவிரமான பிரச்னை.

இப்போது சிறார்களும் அதிகஅளவில் இணையதளத்தையும், அறிதிறன்பேசியையும் பயன்படுத்த நாம் அனுமதிக்கிறோம். பெற்றோர்கள் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தில், பிள்ளைகள் வேறு விஷயங்களை இணையத்தில் பார்க்கிறார்கள். இது ஏற்க முடியாத சமூகப் பிறழ்வு.

இதில் நாம் நேரடியாக என்ன செய்ய முடியும்? பொதுவான கொள்கைகள் அடிப்படையில் உங்கள் வேண்டுகோளை நாங்கள் ஏற்கிறோம். சூதாட்டம், பந்தயம் கட்டி விளையாடுவது தடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் இதனை நீதிமன்றம் மட்டும் உத்தரவிட்டு மாற்ற முடியாது.

சட்டம் மட்டுமே ஒருவரை சூதாட்டத்தில் இருந்து தடுத்துவிட முடியாது. எனவே, இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என விளக்கமளிக்கக் கோரி மத்திய அரசுக்கு உத்தரவிடுகிறோம். அனைத்து மாநில அரசுகளும் இந்த விஷயத்தில் எடுத்த நடவடிக்கை குறித்து பதிலளிக்க வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

CIN : U67100TZ2014PTC020363

பெருநிறுவன அலுவலகம் – கோஹினூர் ஸ்கொயர், 47 வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.

மின்னஞ்சல் : divakaran@omkaraarc.com

அதிகாரப்பூர்வ அலுவலர் – அலைபேசி : +91 93446 84194 / +91 98840 62068 / 99623 33307

பிற்ச்சேர்க்கை – IV–A

(பார்க்க – விதி 8(6) – உ/ப 9(1) க்கான விதி விலக்கு)

அசையா சொத்து விற்பனை செய்யப்படுவதற்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) – உ/ப – 9(1) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் **(OARPL)** ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் கவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஓம்காரா டிரஸ்ட் 22/2020–21 ட்ரஸ்ட் – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் **(OARPL)** ஆனது, 26.02.2021 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் கீழ், ஃபுல்லர்டோன் இந்தியா சுரரடட் கம்பெனி லிமிட்டெட் (பணி ஒப்படைப்பவர்) யிடமிருந்து இதன் கீழ்க்கண்ட ஜாமீன் சொத்துக்களுடன் சேர்த்து இதன் கீழ்க்கண்ட கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத்தொகைகளையும் அடைந்துள்ளது. அதனால், **OARPL** ஆனது பணி ஒப்படைப்பவரின் நிலையினை பெற்று, நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், பிணைக்காப்பு அமலாக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. **OARPL** ன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார்., அதனால் ஜாமீன் சொத்துக்களை வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் / விலைகோரல்களை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு வரவேற்கப்படுகின்றன. இதன் கீழ்க்கண்ட அந்தந்த களத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்று கடனளித்த **OARPL** க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் கூட்டு கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4) ன் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் செயலுறுத்தி **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள், நிலுவைத்தொகைகளை, பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி, அடிப்படை விலை, விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர் :	திரு K மணிவண்ணன் & திருமதி M ராஜேஷ்வரி

ஜாமீன் சொத்து விபரங்களாவன – திருமதி M ராஜேஷ்வரி, க/பெ. K மணிவண்ணன் என்பவருக்கு சொந்தமான சொத்து (தான செட்டில்மெண்ட் ஆவண எண். 97/2008 – தேதி – 11.01.2008 மற்றும் பிழை திருத்த ஆவண எண். 1811/2013 – தேதி – 21.03.2013) – சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார் பதிவு மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, கூடலூர் கிராமம், சர்வே எண். **3/2B2B5** ல் அமையப்பெற்ற புஞ்சை ஹெக்டேர் 0.82.5., இதற்கு புஞ்சை ஏக்கர் 2.04., க்கு தீர்வை ரூ. 3.18/– இதில் உள்ள புஞ்சை ஏக்கர் 1.55 சென்ட்., இதில் உள்ள 7002 சதுர அடி பரப்பளவு கொண்ட இந்த சொத்து விபரத்துக்கான இடம்., தானமளிக்கப்பட்ட இச்சொத்துக்கான எல்லைகள் மற்றும் அளவீடுகளாவன – வடக்கு – **M** ராஜேஸ்வரிக்கு சொந்தமான கட்டிடம், தெற்கு – **K** மணிவண்ணனுக்கு சொந்தமான மீதி சொத்து, கிழக்கு – **IVRCL** நிறுவனத்துக்கு அனுமதிக்கப்பட்ட சாலை, மேற்கு – கலோச்சனா தேவிக்கு சொந்தமான இடம்., இந்த எல்லைகளுக்கு மத்தியில் உள்ள அளவீடுகளாவன – கிழமேல் இருபுறமும் 72 அடி., தென்வடல் இருபுறமும் 97–1/4 அடி., என மொத்தம் 7002 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் தென்மேற்கில் உள்ள ஒரு கிணறு மற்றும் அதன் மின் இணைப்பு எண். 587, 5 **HP** மோட்டார் மற்றும் 89 சதுர மீட்டர் பரப்பளவுடன் கூடிய கள்ளிக்கோட்டை ஓட்டு வீட்டு இடம் மற்றும் 99 சதுர மீட்டர் பரப்பளவுடன் கூடிய **RCC** கட்டிடம், மின் இணைப்பு எண். 669 மற்றும் 158 சதுர மீட்டர் பரப்பளவுடன் கூடிய **ACC** வீட் கட்டிடம் மற்றும் மேற்சொன்ன கட்டிடத்துடன் கூடிய அனைத்து வசதிகள் மற்றும் அனைத்து பாதை உரிமைகள் மற்றும் வழி வசதி உரிமைகள் ஆகியன. இச்சொத்து கூடலூர் கிராம எல்லைக்குள் அமைந்துள்ளது.

சொத்தின் உரிமையாளர்	திருமதி M ராஜேஷ்வரி, க/பெ. K மணிவண்ணன்		
13(2) அறிவிப்பு தேதி	சுவாதீன தேதி	21.05.2025 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை	
02.02.2022	14.10.2024	ரூ. 1,78,71,732/– (ரூபாய். ஒரு கோடியே எழுபத்து எட்டு இலட்சத்து எழுபத்து ஒராயிரத்து எழுனூற்று முப்பத்து இரண்டு மட்டும்)	
அடிப்படை விலை	டேவணித்தொகை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	சொத்து ஆய்வு தேதி & நேரம்
ரூ. 40,11,000/– (ரூபாய். நாற்பது இலட்சத்து பதினோராயிரம் மட்டும்)	ரூ. 4,01,100/– (ர